ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක **2256/3 -** 2021 නොවැම්බර් මස 29 වැනි සඳුදා **- 2021.11.29**

2256/3 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: DIVKE/LND/LND2/ACQUT/5/9
4-3/8/2017/பிசி/222.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், 1093 ஆம் இலக்க, இஹல முருதன்கே கிராம அலுவலர் பிரிவில் முருதன்கே கிராமத்தில் இ.கி.வ. 14 இல் மேலதிக இலக்கம் 37, தாள் இலக்கம் 37 ஐயும் உடைய சுவட்டு வரைபடத்தில் கீழ்க் குறிப்பிட்ட காணித் துண்டின் விபரம்,

**துண்டு இல. 521; காணியின் பெயர்: தல்கஹமுல வத்த மற்றும் கெஸல்ஹேன, மாதங்கஹமுலவத்த, இஹலபிட்டியேவத்த, படதொல எஸ்டேட்; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடங்கள் 02 மற்றும் நீர்த்தாங்கியொன்று அமைந்துள்ளன, வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் கட்டிடமொன்று கட்டப்பட்டுள்ளது; உரிமை கோருபவர்: கண்டுபிடிக்கப்படவில்லை; விஸ்தீரணம்: 0.03494 ஹெக்டயார். (0.ஏ. 3 ரூட். 18.1 பேர்ச்)**

வடக்கு: 8 AM இலக்க காணித் துண்டுகள்; கிழக்கு: வீதி, 522 ஆம் இலக்க காணித் துண்டுகள்; தெற்கு: 8 BN, 115 ஆம் இலக்க காணித் துண்டுகள்; மேற்கு: 115, 8 AM ஆம் இலக்க காணித் துண்டுகள்.

**துண்டு இல. 522; காணியின் பெயர்: - ; விபரம்: வீதி (பிரதேச சபை); உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0814 ஹெக்டயார். (0.ஏ. 0 ரூட். 32.2 பேர்ச்)**

வடக்கு: - ; கிழக்கு: - ; தெற்கு: - ; மேற்கு: - ;

**துண்டு இல. 523; காணியின் பெயர்: தல்கஹமுல வத்த மற்றும் கெஸல்ஹேன, மாதங்கஹமுலவத்த,**



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**இஹலபிட்டியேவத்த; காணியின் விபரம்: காணி எடுத்தற் திருத்தச் சட்டத்தின் கீழ் வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் கட்டிடமொன்று கட்டப் பட்டுள்ளது; உரிமை கோருபவர்: கண்டுபிடிக்கப்பட வில்லை; விஸ்தீரணம்: 1.0553 ஹெக்டயார்.**

வடக்கு: 8 AB, 8 AE இலக்க காணித் துண்டுகள்; கிழக்கு: 8 AE, 8 AJ மற்றும் 8 AH இலக்க காணித் துண்டுகள்; தெற்கு: 8 AL இலக்க காணித் துண்டுகள்; மேற்கு: வீதி, 522 ஆம் இலக்க காணித் துண்டுகள் மற்றும் வீதி.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குளியாப்பிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. பீ. எஸ். குமார,
பிரதேச செயலாளர்,
குளியாப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
குளியாப்பிட்டிய,
2021, நவெம்பர் 26.

12 - 224